127

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க] விக்ரம புரட்டாசி. [இதழ் ௬.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வெல்க!
இமிழ்முர செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

சங்கத் தலைவாய் வழங்கு புலத்
தவலா தவிர்வான் முத்தகமும்
தளையே டவிழ்ந்த தொடைபசைசீர்
தழைவார் பாநற் காவியங்கள்
பொங்கத் திகழ்தண் ணீர்த்துறையும்
பொலியு மமிழ்தத் தமிழ்வாரி
புரிவி னிறைந்த நகைவிரியப்
புரைதீர் கருசெந் தாதுறமும்
அங்கத் தலர்ந்த அம்புயமே!
அணியார் மாசின் மணிப்பணியாய்!
அடியே னிடர்தீர்த் திலையென்னின்
அன்னாய்! என்னை அருள்வார்யார்?
தங்கத் தொளிர்நின் தஞ்சநிரை!
தாள் மஞ்சரியே அஞ்சலித்தேன்
தணிந்தார் உணர்ந்த தமிழரணந்
தணவா திணங்குந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

கருத்து:— தமிழ் நூற்கடலில் தாமரைபோல் விளங்குந் தமிழணங்கன்னையே! நீ என் இடர்தீர்க்கிலை எனின் எனக்கு அருள் புரிபவர் வேறியார்? என்பதாம்.

கடலுக்கும் தமிழ் நூற்களுக்கும் ஒப்புமை:—

சங்கத்து அலைவாய் வழங்கு புலம் தவலாது அவிர் வால் முத்து அகமும்—சங்கினின்றும் அலைகளில் வீசும் ஒதுக்கிடங்களில் நீங்காது விளங்கும் வெண்மையான முத்துக்களையுடைய பரந்த இடத்தையும்.

சங்கத்தலை வாய்வழங்கு புலம்தவலாது அவிர் வான் முத்தகமும்-முத்தமிழ்ச் சங்கங்களின், புலவர் வாயினின்றும் வழங்கப் பெற்று அன்னார் புலமை நீங்காது விளங்கும் சிறந்த முத்தகம் என்னும் செய்யுளும்.

தளை ஏடு அவிழ்ந்த தொடை அசை சீர்தழைவார் பாநல் (காவியங்கள்) காவி அம் கள் பொங்க திகழ் தண்ணீர் துறையும்—கட்டமைந்த இதழ்களினின்றும் நெகிழ்ந்த தொடர்பால் இணைக்கப் பெற்ற சிறப்பானது மிகுதியும் பொருந்திய பானலாகிய குவளையினின்றும் அழகிய தேன் வழிய விளங்குந் தண்ணீர்த் துறையும் (பாநல்—பானல் பானல்காவி குவளை இருபெயரொட்டு)

ஏடு அவிழ்ந்த—சுவடியின் ஏட்டினின்றும் போந்ததளை, தொடை, அசை, சீர் என்னும் உறுப்புக்களான் மிகுந்த பாக்களாலாகிய நல்ல காவியங்களில் அதிகமாக விளங்கும் குளிர்ந்த இன்பந் தருந் தன்மையுடைய அகப்புறத் துறைகளும்.

தமிழணங்கிற்குந் தாமரைக்கும் ஒப்புமை:—

புரிவில் நிறைந்த நகை விரிய—சுருளான ஒளி நிறைந்த மொட்டுக்கள் மலர.

புரிவு இன் நகை விரிய — அன்புமிகுந்த இனிய புன்னகை விளங்க.

செந்தாது உறழும் அங்கம்—செம்மையான மகரந்தப் பொடிகள் மிகுந்த மேனி, செம்மையான பொன் போன்ற வடிவம்.

கோலின் செம்மை.

சா. நடராசன்

கூட்டுறவுச் சண்காணிப்பாளர், வேலூர்.

இந்நிலவுலகத்தையும், அதன்கண் உள்ள பல்வேறு உயிர்களையும் படைத்துக் காக்கும் இறைவனைக்காண இந்நிலனும், உயிர்களுமே சிறந்த கருவிகளாகின்றன. உயிரற்றனவும், ஓரறிவுமுதல் ஐயறிவினவாக உள்ள உயிருள்ளனவும், இவையே யன்றி நிலம்; ஞாயிறு, திங்கள், செவ்வாய் முதலிய உலகங்களும் இறைவன் வகுத்த நியதிக்குட்பட்டு இயங்கிவருகின்றன. தோன்றுவன மறைதலும், மறைவன மீண்டுந் தோன்றுதலும் இன்ன பிறவும் ஓர் சிறந்த கட்டுப்பாட்டின் படியே நிகழ்ந்துவருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். அவ்வாறன்றித் தோன்றியவை மறையாமலும், மறைந்தவை மீண்டுந் தோன்றாமலும் இருப்பின் அதனால் உலகுக்கும், மக்களுக்கும் உண்டாகும் தொல்லையும், துன்பமும் அளவிடற்பாலவோ! ஐம்பெரும் பொருள்களும் கட்டுக்கடங்கித் தொழில் செய்வதனாலன்றோ இவ்வுலகில் உயிர்கள் தோன்றி வாழ்ந்து மறைய இடனுண்டாகின்றது. நெடுங்கடல் கரையின்றி நிற்பதும், ஞாயிறு உயிர்களுக்குப் போதிய அளவுக்கு மிகாமலும், குறையாமலும் காய்வதும், அங்ஙனமே தண்கார் பொழிவதும், காற்று ஒடுங்கி வீசுவதும், ஊழிக்கடுங்கனல் சுடாதே இருப்பதும் இறைவன் திருவாணையே யன்றிப் பிறிதன்றென்பதை உணராதார் யார்?

இவ்வாறே ஆறறிவு படைத்த மனிதனையும் அவனுள்ளத்திலிருந்து இறைவன் இயக்குகின்றானென்று அறிஞர் கருதுகின்றனர். ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதார்? "ஐம்பெரும் பூதத்தானும் அமைத்தனன் உடலம் யார்க்கும், நம்பனும் ஒருவனுள்ளே ஞானியாய் நடத்துகின்றான்," என்று கீதையும் முழங்குகின்றது.

"உடம்புளே யுத்தமன் கோயில்கொண்டானென்று, உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" என்றார் திருமூலரும் தமிழரின் கருவூலமாய தந்திரு மந்திரத்துள். இறைவன் வகுத்த இயற்கை விதிகளின்படியே மனிதன் உயிர் வாழ்தல் வேண்டுமென்பது அவ்விறைவனின் உள்ளக் கிடக்கை. எனினும் மனிதன் தனக்கேற்பட்டுள்ள

பகுத்தறிவால் உந்தப்பட்டு மனஞ் சென்றவழிச் சிற்சில சமயங்களில் செயலாற்றுகிறான். ஆற்றவே அவன் இயற்கை விதிகளை மீறவும் இடனுண்டாகின்றது. அவ்வாறு மனிதன் தீய நெறியிற் செல்லாமற் காத்தாலன்றி அவனுடைய உடல் பொருள் முதலியவற்றின் ஆக்கத்தால் பிறவுயிர்களுக்குத் தீங்கேற்படவுங் கூடும். அப்பொழுது மனித சமூகத்தில் அமைதி நிலவாது. அதனோடு சமூகம் முன்னேறவும் வழியில்லை. ஆகவே, தனி மனிதனாலோ அல்லது மனிதக் கூட்டத்தாலோ மற்ற வுயிர்களுக்கு ஊறு ஏற்படாது காக்கவேண்டுவது மக்கள் கடமை. ஆனால் தனி மனிதன் ஒவ்வொருவனும் இக்கடமையைச் சரிவரச்செய்துமுடித்தல் இயலாதென்பது வெள்ளிடைமலை. எனவே மக்கள் யாவரும் ஒருங்குசேர்ந்து அவருள் சிறந்த ஒருவனைத் தங்களுக்குத் தலைவனாக்கி அக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பை அவன்பால் விடலாயினர். அதுபற்றியே, "மன்பதை காக்குந் தென்புலங்காவல்" என்ற சொல்லாட்சியும் ஏற்படலாயிற்று.

இவ்வாறு மன்பதையைக் காக்கும் பொறுப்பேற்ற தலைவரே வழிவழி மன்னரென அழைக்கப்படலாயினர். நந்தமிழ் நாட்டில் அரசநெறி பிழையாது காவல்செய்த பல்வேறு மன்னர்களின் வரலாற்றை நம் பண்டை நூல்களில் பரக்கக் காணலாம்.

"புகழுருவம் நிறுத்தவைந்து பொறியுருவஞ்
சரணடைந்த புறவுக்கீந்தும்
மகவிரதத் தருளியினோர் சுரபிதுயர்
தணித்திடுவான் மகிழ் வுற்றார்ந்தஞ்
சகமுழுது மொருதனிக்கோல் செலுத்துமனு
குலவேந்தர் தமிழ்ச் சோணாட்டில்"

என அரிசமய தீபமும் உரைக்குமாறு காண்க.

"நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே, மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்," என அரசனுக்குப் புறநானூறு இலக்கணங் கூறுகிறது. தொண்டர் சீர்பரவுவாராய சேக்கிழார் பெருமானும் மனுநீதிச் சோழனை "மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம், கண்ணுமாவியு மாம்பெருங் காவலான்," எனக் கூறிய நயம்பெரிதும் சிந்திக்கற்பாற்றாம். "காயமு முயிருமாகிப் பொருடோறுங் கலந்துநின்ற" இறைபவன் தன்மை போன்றே உடம்பாகிய உலகத்தை அரசன் அதன் உயிராகிப் புரக்கின்றான். அஃதன்றியும் அவ்வுடலின் சீரிய உறுப்பாய கண்ணாகவும்

அரசன் இருக்கிறான். யாதுபற்றி எனின் உடலில் எந்த உறுப்புக்கு ஊறு ஏற்பட்ட காலையும் கண்களே முதலில் அவ்வுறுப்பை நோக்கி இரங்குகின்றன. அவ்வாறே அரசனும் தன் தேயத்தின் எப்பாகத்திலாவது எக்குடிக்காவது ஏற்படும் துன்பத்தை உடனே அறிந்து அதற்குக் கழுவாய் தேடும் ஆற்றலுடையவன் என்பது பெற்றாம்.

அத்தகைய அரசரை நம்முன்னோர் தெய்வமாகவே கொண்டாடினர். "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப்படும்" என்று ஆசிரியர் திருவள்ளுவனார் நந்தமிழ் மாமறையில் உண்மை தெரித்தமை காண்க. இக்கருத்துப்பற்றியே போலும் தில்லையுள் நட்டம் பயின்றாடு நாதன் அம்பலத்தரசு என அழைக்கப்பெற்றான். திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டதுபோலும் என ஆழ்வார் ஒருவரும் அழகுபடக் கூறியருளினர்.

இறைமுறை பிறழாது ஆட்சிசெய்யும் அரசனை மக்களினத்தினின்றும் உயர்த்துவது அவனது குடையும், கோலும், வேலுமேயாம். அவனது குடை வெண்கொற்றக் குடையெனவும், அவன் கோல் செங்கோலெனவும், அவன் வேல் கொற்றவேல் எனவும் மக்கள் அன்போடு கூறுவர். அக்குடையின் தண்மையும், கோலின் செம்மையும், வேலின் கொற்றமும் அவ்வரசை மிகச்சீரிய தாக்குகின்றன.

> "நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
> கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
> கோலின் செம்மையும் குடையின் றண்மையும்
> வேலின் கோற்றமும் விளங்கிய கொள்கைப்
> பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட
> மதுரை மூதூர் மாநகர் ... ... "

என இளங்கோவடிகள், மதுரையிலிருந்து அரசோச்சிய பாண்டியர் திறத்தை வியந்தமை பெரிதும் போற்றற்பாலதாம்.

அவற்றுள் ஈண்டு நாம் கருதப்புகுவது கோலின் செம்மையேயாம். என்னையெனின் கோலின் செம்மையில் குடையின் தண்மையும் வேலின் கொற்றமும் அடங்குமென்க. அதனாலேயே சிலப்பதிகார ஆசிரியர் இம்மூன்றினுள்ளும் கோலின் செம்மையையே முதலில் சிறப்பித்துக் கூறினர்.

(தொடரும்)

பரிணாமவாதம்

திரு. K. பிரம்மசாரி M. A; L. T;

பரிணாமம் என்பதன் அர்த்தம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அநேக அறிவாளிகள் ஜீவராசிகள் எப்படி உற்பத்தியாயின என்பதைப்பற்றி யோசித்து வந்தார்கள். அது சம்பந்தமான விஷயங்கள், எப்போதும் வாக்கு வாதத்துக் குரியனவாயும், கற்பனா சக்திக்கு இடங் கொடுக்கக்கூடியவையாயுமிருந்தன. அக்காலத்தில் இதைப்பற்றின சித்தாந்தங்கள் அநேகமிருந்தபோதிலும், அவைகளில் யாதொன்றையும் ஒத்துக் கொள்வதற்கான நியாயங்களும், சாட்சிகளும் போதுமானவைகளாகக் காணப்படவில்லை. இச்சித்தாந்தங்கள் பண்டிதர்களுக்கன்றி, சொற்பமாகப் படித்த ஜனங்கள் அறியக்கூடாத பாஷைகளிலும், விலை உயர்ந்த புத்தகங்களிலுமே எழுதப்பட்டிருந்தன தற்காலத்தில் சாதாரண ஜனங்களுக்கென்றெழுதப்படும் புத்தகங்களிலும் இம்மாதிரியான விஷயங்கள் சரிவர எழுதப்படவில்லையென்று பிரபல அங்கில ஆசிரியரான புரேபஸர்'மேக் பிரைட்'குறைகூறுகிறார்.

பூமியைத் தோண்டியபொழுது தற்செயலாகப் பிராணிகளின் எலும்புக் கூடுகள் சில கிடைத்தன. சிற்சில இடங்களில் அவைகளின் சிலாரூபங்கள் அதாவது எலும்புகளில்லாமல் அவைகள் படிந்திருந்த தடங்கள் மட்டும் கிடைத்தன. அவைகளைக் கண்டதும் அவைகள் எப்படி அங்கே வந்திருக்கக் கூடுமென்று யோசனை செய்தார்கள். அதற்கு ஒரு மேதாவி "மனிதனிடத்தில் இயற்கையாய் எழும் ஆராய்ந்தறியும் ஆற்றலை ஒடுக்குவதற்காகவே கடவுள் வேண்டுமென்றே சிலா ரூபங்களை ஒளித்துவைத்திருக்கிறார்" என்று சொன்னதாகப் புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கிறது. இது சாதுர்யமாகக் காணப்பட்டாலும் யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. ஆகவே இவைகள் ஒருகாலத்தில் ஜீவித்திருந்து மடிந்துபோன ஜீவராசிகளின் சிலா ரூபங்களே என்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால் உலகம் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்டதுமுதல் இதுவரை அப்படியே மாறுதலின்றி இருந்து வருகிறதென்னும் சிருஷ்டி சித்தாந்தத்தை சந்தேகிக்க நேரிட்டது. இதை விளக்குவதற்காக "குவியர்" என்னும் பேரறிஞர் வேறுவிதமான சித்தாந்தத்தை வெளியிட்டார். அதாவது

மனிதர், மிருகங்கள், தாவரங்கள் முதலிய ஜீவராசிகள் எல்லாவிடத்திலும் ஒன்றுபோலவே பரவியிருந்தனவென்றும், ஆனால் இப்போதும் சிற்சில இடங்களில் பூகம்பம் உண்டாகிறதுபோல் அக்காலத்திலும் ஒவ்வோரிடங்களில் பூகம்பம் ஏற்பட்டு, அங்கு வசித்த ஜீவராசிகள் மடிந்து கற்களில் அகப்பட்டு, வெகுகாலத்துக்குப்பிறகு, சிலாரூபங்களாக மாறிவிட்டனவென்றும், ஒவ்வொரு அழிவுக்காலத்துக்குப் பிறகும் சுற்றுப்பக்கங்களில் ஜீவித்திருந்த பிராணிகள் அழிந்த பாகத்தின்மேல் சென்று ஜீவித்து விர்த்தியாயினவென்றும் பிரஸ்தாபித்தார். இந்தக் கொள்கைப்பிரகாரம் சிருஷ்டி ஒருதடவையென்றும், ஆனால் அழிவும் வளர்ச்சியும் அடிக்கடி உண்டாயிருக்கலாமென்றும் அர்த்தமாகிறது.

பூதத்துவ சாஸ்திர ரீதியாகப் பார்க்கும்போது பூமி மட்டத்தின் கீழ் கற்பாறைகள் அடுக்கடுக்காக இருப்பதையும், ஒவ்வொரு அடுக்கிலும் வெவ்வேறு பிராணிகளின் சிலாரூபங்கள் படிந்திருப்பதையும் கண்டார்கள். மேலும், கீழேயிருக்கும் புரணியில் தாழ்ந்தவகைப் பிராணிகளும், படிப்படியே மேல்புரணிகளில் உயர்ந்தவகைப் பிராணிகளின் உருவங்களும் அகப்படுகின்றன. இதை விளக்குவதற்காக இன்னொரு அறிவாளி, உற்பத்தியும், அழிவும் வெவ்வேறு காலங்களில் உண்டாயிருக்கலாமென்று கூறுகிறார். அதாவது முதல் சிருஷ்டி "மீன்காலம்" என்ற "சைலூரியன்" காலத்திலும் இரண்டாவது சிருஷ்டி "செம்மணல் காலம்" என்ற "டேவோனியின்" காலத்திலும் இம்மாதிரி 27 தடவை உண்டாயிற்றென்றும், ஒவ்வொரு தடவையும் பிராணிகள் முழுமையும் அழிந்துபோய் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டனவென்றுங் கூறுகிறார்.

மேற்சொன்ன சித்தாந்தங்கள் யாவும் சிருஷ்டியை அடிப்படையாகக் கொள்வதுமன்றி ஜீவராசிகள் படைப்புமுதல் இதுவரையில் பல ஆயிர வருஷங்களாக யாதொரு மாறுதலும் அடையாமல் அப்படியே இருக்கின்றனவென்பதை ஒத்துக்கொள்ளுகின்றன. இவைகள் அக்காலத்து அறிவுக்கேற்ப பொருத்தமுடையனவாயிருந்தன. ஆனால் அறிவு வளர வளர, பிராணி நூல், பிண்ட உற்பத்தி நூல், உடல் கூற்று நூல், சிலாரூப தத்துவ நூல், பூமி நூல் முதலியவைகளின் ஞானம் விர்த்தியானதினால் சிருஷ்டி சித்தாந்தம் சரியல்லவென்று அறிவுடையோர்கள் சந்தேகித்தார்கள். ஆகவே தற்காலத்தில் இருக்கும்படியான பிராணிகள்யாவும் பல்லாயிர வருஷங்களுக்கு

முன்னிருந்த கீழ்வகைப் பிராணிகள் படிப்படியாக மாறுபட்டு, முன்னேற்றமான வளர்ச்சியையடைந்து வந்தவைகள்தான் என்ற முடிவுக்கு வந்தார்கள். இதற்குத்தான் பரிணாமம் என்று பெயர் கொடுக்கப்பட்டது. உதாரணமாக, மேல்பார்வைக்கு யாதொரு பாகுபாடுமே இராததுபோல் காணப்படும். ஒரு சிறு மொக்குளானது, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பிறகு புறவிதழ், பூவிதழ், அண்டாசயம், கர்ப்பகோசம், மகரந்தத்தண்டு முதலிய அநேக பாகங்களாக மலருவதுபோல, கீழ்வகைப் பிராணிகள் கொஞ்சம் கொஞ்சமாக அங்க அமைப்புகளில் விர்த்தியடைந்து, முடிவில் தற்சமயம் நாம் பார்க்கும் ஜீவராசிகளாக மாறுபட்டிருக்கின்றனவென்பதே.

ஆனால் 18-வது நூற்றாண்டில் ஜந்து சாஸ்திரிகளுக்குள் பரிணாமம் என்றால் என்ன என்பதைப்பற்றி இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. ஒரு சாரார் ஜந்து உற்பத்தியை மொக்குளிலிருந்து புஷ்பம் விரிவதற்கு ஒப்பென்று கருதினார்கள். உதாரணமாக, கோழி முட்டைக் கருவில் கோழியின் எல்லா அவயவங்களும் முன்னமேயே அமைந்திருக்கின்றன வென்றும், ஆனால் அவைகள் அதி நுட்பமாகவும், நெருக்கமாகவும் அமைக்கப்பட்டிருப்பதால் கட்புலனுக்குத் தெரியவில்லையென்றும் வாதாடினார்கள். ஆனால் மற்றொரு சாரார் அதை மறுத்து வேறுவிதமான அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதாவது கோழியின் அவயவங்கள் வித்தியாசப்படாமலிருக்கும் கருச்சத்திலிருந்து மூன்று படைகளாகப் பிரிந்து, மேற்படையிலிருந்து மூளை, தோல் முதலியனவும் கண் முதலிய இந்திரியங்களும், நடுப்படையிலிருந்து தசை, எலும்பு, ஜனனேந்திரியங்கள் முதலிய அவையவங்களும், கீழ்ப்படையிலிருந்து உணவுப்பையும் அதனுடன் சம்பந்தப்பட்டவைகளும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து, வளர்ச்சியடைந்தனவென்று வாதித்தனர். அன்றுமுதல் இன்றுவரை செய்யப்பட்ட பிராணி பிண்ட உற்பத்தி முதலிய சாஸ்திரங்களின் ஆராய்ச்சி, பின்னே சொல்லப்பட்ட கொள்கையை உறுதிப்படுத்துகிறது. இவ்விஷயங்களைப்பற்றி விரிவாகப் பின்வரும் அதிகாரங்களில் காணலாம். இது நிற்க

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பிரான்சு தேசத்து ஜந்து சாஸ்திரி ஜீன் லேமார்க் என்பவர் மற்றொரு சித்தாந்தத்தை வெளிப்படுத்தினார். அவர் சித்தாந்தத்தின் பிரகாரம், பாஹியத்தின் மாறுதலினாலே, அதில் வசிக்கும் ஜந்துக்களின் உருவமும், அளவும்,

உடலமைப்பு முதலியனவும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவந்து காலாந்தரத்தில் வேறு உருவும், அளவும், அமைப்பும் அடைகின்றன.

பிராணிகள் வசிக்கும் இடபேதத்தினால் அவைகள் வேறுவித மான உணவைத் தேடவோ, அல்லது தேடியவை கிடைக்காத போது வேறுவகை உணவைப் புசிக்கவோ நேரிடுவதுமன்றி தம் சத்ருக்களோடு சண்டையிட்டு ஜயிக்கவோ, அல்லது அவைகளிட மிருந்து தப்பித்துக்கொள்ளவோ, பல்வேறு உபாயங்களைக் கையாளு கின்றன. இப்புதிய ஜீவியத்தின் காரணமாக ஜந்துவானது முன்னை விட சில அவயவங்கள் அதிகமாகவும், சில அவயவங்களைக் குறைவாக வும் உபயோகிக்க நேரிடுகிறது. அதனால் அதிகமாக பயன்படுத்தப் பட்ட அவயவம் அளவில் பெருத்தும், உறுதியாயும், அதிகமாய் பயன்படுத்தப்படாத அவயவங்கள் சிறுத்தும், மெலிந்தும் காணப் படுவது இயற்கையே. இவ்வாறு மாறுதலுற்ற அவயவங்களைப் பிற்காலத்தில் அதன் சந்ததிகள் பெறுவது நிச்சயம். இச்சந்ததி களும், மாறுதல் அடைந்த அதே பாஹ்யத்தில் வசிப்பதனாலேயே மிகுதியும் பயன்படுத்தப்பட்ட அவயவங்கள் உறுதியானவையாயும், குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அவயவங்கள் சக்தியற்றவையாயு மாகிவிடுகின்றன. இவ்வாறு பரம்பரையாக இவ்வவயவங்கள் பின் சந்ததிகளுக்குச் செல்வதனால், இந்தப் பிராணிகள் தங்களின் மூதாதைகளின்றும் பேதப்பட்டுத் தோன்றும் இதுதான் லேமார்க் சித்தாந்தத்தின் சுருக்கம். இந்த சித்தாந்தத்திற்குத்தான் பரிணாமம் என்று தற்காலப் பண்டிதர்களில் சிலர் சொல்கிறார்கள்.

(தொடரும்)

படிக்கும் பழக்கம்.

திரு. B. சாவளப்பா B. A;

ஆசிரியர், இந்து ஆரம்பப் பாடசாலை, ஆம்பூர்.

108-ம் பக்கத் தொடர்ச்சி.

மேலே கூறிய வேடிக்கைகளையும் ஆடல் பாடல்களையும் அறவே விட்டொழிக்கவேண்டுமென யான் கூறவில்லை. பிற இன்றியமையாத நற்காரியங்களை விட்டு அவைகளில் காலம் கடத்துவது குற்றமாகும். உதாரணமாக, படிக்கும் பழக்கம் ஒரு சிறந்த பயன்தரும் ஒழுக்கமாகும். படிப்பதால் நாம் உலக அறிவும் சீர்த்திருத்தமும் பெறுவதோடு ஆன்ம அறிவும் பெற்று உய்வதற்கான வழியைக் கோலிக் கொள்ளலாம்.

படிக்கும் கலை ஏனைய கலைகளினும் மிக எளியது. மற்றும் பயனுள்ளது என்பதில் ஐயமில்லை. பிற கலைகளாகிய நாட்டியம், வீணை வாசித்தல், சங்கீதம் பழகல், சித்திரம் வரைதல் முதலிய கலைகளைக் கற்கப் பணமும் ஆசிரியர் ஆதரவும் வேண்டும். ஆனால் படிப்புக் கலைக்கோ அத்தகைய செலவும் பிறர் உதவியும் அறிவும் வேண்டியதில்லை. தற்காலத்தில் புத்தகக் களஞ்சியங்களும் வாசக சாலைகளும் ஒவ்வொரு ஊர்தோறும் நிலைத்துள்ளன. அவ்விடங்களில் பண்டை நூல்களையும் தினசரிப் பத்திரிகைகளையும் வாசித்துப் பயனடையலாம். புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விலைகொடுத்து வாங்க முடியாத வறிஞர்க்கு இந்நிலையங்கள் பெரிய கலைக் கழகங்களாகும்.

முடிவாகக் கூறுங்கால் படிக்கும் கலைக்கு நிகராக எக்கலையும் இல்லை என்பது துணிபு. பிறவெக்கலையையும் புத்தகங்களில் எழுதியிருப்பதால் அவைகளைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம் எனவே ஏனைய கலைகளை அறியவும் படிப்புக் கலையே துணையாகின்றது. தமிழ்ப்பாநடையும் உரையும் இயற்கை நடைபெற்றிருப்பதால் அவைகளைப் பொருள்படப் படித்தற்குப் புள்ளிகளும் குறிகளும் வேண்டுவதில்லை எனத் தெரிந்தோம் எனினும் உலகத்தோடு ஒக்க வாழவேண்டும் என வள்ளுவரும், பிறநாட்டார் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும் எனப் பாரதியாரும் கூறுவதாலும் மற்றும் தற்காலத்தில் நம் தமிழ்மொழி பிற மொழிகளுடன் உறவாடுவதால் அம்மொழிகளிலுள்ள புள்ளிகளையும் குறிகளையும் இட்டு எழுதினால் தமிழின் இயற்கை நடைக்குப் பழுது வாராது என்பது அறிஞர் துணிபு.

137

குடை நிழல்.

திரு K. P. சந்தோஷம் அவர்கள் B. A; L T;
தலைமையாசிரியர்
ஊறீஸ் உயர்தரக் கலைக்கழகம், வேலூர்.

105-ம் பக்கத் தொடர்ச்சி.

மன்னனது குடை குளிர்ச்சிசெய்து காப்பதுமன்றிப் புகழாகிய ஒளியொடு விளங்கவும் வேண்டுமென்பது கருதி, அது ஒண்மதி போல் வெண்மையுந், தண்மையும் விரவி விளங்க,வண்ணமும் வடிவமும் வகுத்தனர் வண்டமிழ்ப் புலவர். இக்கருத்து இடைவிடாது தமிழ்ப் புலவருள்ளத்துக் குடிகொண்டிருந்தமையால், அவர்கள் குடையின் சிறப்பைப் பெருநில வேந்தரையும்,குறுநில மன்னரையும் பாடிய பாடல்களில் மிக மகிழ்ந்து போற்றியிருக்கின்றனர். மன்பதை புரக்கும் மன்னன் குடையின் மாண்பை நம் தமிழ் நூல்கள் கூறுமாறு வேறெந்நாட்டிலும்,எம்மொழியிலும் பாராட்டுவதைக் காண்கிலேன். ஆதலின், இது ஒரு தனித்தமிழ் மரபென்றே கொள்ளக் கிடக்கின்றது.

தமிழரசர்கள் பிற நாடுகளின்மேல் படையெடுத்துச் செல்லுங்கால், குடைக்கு வேண்டிய சில கடன்களியற்றி அதை முற்செல விடுத்தாரென்று காண்கின்றோம். சிலம்பு காரணமாக எழுந்த சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன், கற்புக்கரசியாகிய கண்ணகியின் உருவமைக்கக் கற்கொணரும் பொருட்டுக் கைலைநோக்கிப் பெயர்ந்த காலை, குடையை முன்விடுத்த செய்தி கூறப்படுகிறது. அன்றியும், புறப்பொருளியலில் குடை மங்கலமென்றொரு துறையுங் காணப்படுகிறது. புறப்பொருள் வெண்பா மாலையில் குடையைப்பற்றிய பல துறைகளையும் பார்க்கலாம்.

இன்று நம் தண்டமிழ்த் தாயகம் தமிழர் அரசாட்சியிலிராது அங்கில மக்கள் பாதுகாப்புக் குட்பட்டிருக்கிறது. தமிழ்வழக்கொழிந்து, தமிழர் மரபு சிதைந்து, தமிழ்த்தாய் மிக இரங்கத்தக்க இழிநிலை எய்த, தமிழரெனத்தம்மைச் சொல்லிக்கொள்வோரிற் பெரும்பாலோர், தமது தனிநிலையறியாது மயங்கித் தவிக்குமிந்நாளிலுங் கூடப் பண்டை வழக்காறுகிய குடை மேம்பாடு நின்றபாடில்லை. மாகாணத் தலைவர்கள் (கவர்னர்கள்) இந்திய துரைத்தனத் தலைவர் (வைஸ்ராய்) முதலியோர் உலாப்போதுறுங்கால், வெண்கொற்றக் குடைகள் வேத்தியல் சின்னங்களாக இன்றும் உயர்த்தப்பெறுவதைக் காணலாம். சென்னையிற் பலமுறை இதை யான் கண்டுளேன். குடையின் கருத்தறிப்பாத மேனாட்டினர் இத்தமிழ் வழக்கை யாண்டுப்பெற்றனர் ?

சேர, சோழ, பாண்டியர் நாடாண்ட காலத்துத் தமிழ்ப்புலவர் குடைத்திறம் போற்றினர். அக்காலத்தில் இம்முப்பெரு வேந்தரு மிடைவிடாது ஒருவரோடொருவர் பொருது தமது வலியை இழந் தனர். அவர்கள் ஒன்றுபட்டுத் தமிழ் நாட்டை யுடன்பிறந்தார் போல் ஆளவேண்டுமென்று ஆழ்ந்த அறிவுடைய ஆன்றோர் உளங் குழையும் வகையிலெடுத்துக் காட்டினர். வேறு பல துறைகளிற் சிறப்புற்று விளங்கிய இவ்வரசர், புலவர்வாய் மொழிக்குச் செவி சாய்த்திலர். ஈண்டுக் கூறுமிந்நிலை, கி. பி. இரண்டாம், மூன்றும் நூற்றாண்டிற்கு முற்பட்டது. பிறகு தமிழ் மன்னர் ஆட்சியும் ஆற்ற லுஞ் சுருங்கின. ஏறக்குறைய ஏழு நூற்றாண்டுகள் கழிந்தபின், பதினோராம் நூற்றாண்டில் சோழர் ஆட்சி தலையெடுத்தது. அவ்வாட்சி குமரிமுதல் இமயம்வரை நீள்வதாயிற்று. இக்காலத்திற்றான் குடை நிழல் மரபு இந்நாடெங்கும் பரவிச் சோழர்க்குப்பின் வந்த தமிழ ரல்லாத பிறராலும் பின்பற்றப்பட்டதென்று நினைக்க இடமுண்டா கிறது. இம்முறையில் அங்கிலர்க்கும் இம்மரபு எட்டிற்று. ஆதலின், தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னர் இருந்து இன்றளவும் நம் நாட்டில் கொற்றவர்களின் குடைச் சிறப்பென்ற கருத்து அழியா துலவி வருகின்றது.

அங்கில அரசாட்சி தொடங்கியபின், பெரிய நகரங்களிலும் பட்டணங்களிலும் ஆட்சிசெலுத்தும் நகராண்மைக் கழகங்கள் நாளாவட்டத்தில் ஏற்படலாயின. ஆட்சித் துறையிற் பயிற்சியளிக் கும் இக்கழகங்கள் இப்பொழுது நாட்டுப்புறங்களிலுமுள. சென்னை நகருக்கு முதன்முதல் தன்னாட்சியுரிமை வழங்கப்பட்டபொழுது அவ்வாட்சியை நடத்துங் கழக உறுப்பினர் ஒவ்வொருவரும் விருது களாகக் குடைகளைக் கொள்ளுமுரிமை யுடையராயினர் என்று வரலாற்று வாயிலாயறிகின்றோம். இவ்வுண்மை, எட்டாவது எட்வர்ட் மன்னராக இருந்து அரசு துறந்த கோமகன் சென்னைக்கு வந்த பொழுது நகராண்மைக் கழகத்தார் அளித்த வரவேற்பிதழிற்குப் பதிலுரைத்த காலை வெளிவந்தது. ஆட்சிக்குங் குடைக்குமுள்ள தமிழ்ப் பொருத்தத்தின் வழக்குப்பற்றியே இஃதெழுந்தது.

நாகரிகமுங் கல்வியும் பரவாத சிற்றூர்களில் வாழும் மக்கள் சிலரிடையே, பிறப்பில் எளியவர்கள் குடைபிடிக்கலாகாதென்ற ஒரு கட்டுப்பாடு எழுதாச் சட்டமாய்ப் பின்பற்றப்படுகிறது. தமிழரின் குடைநிழல் மரபு நானிலமாண்ட மேன்மையிலிருந்து இந்நிலைக் கிறங்கியிருக்கிறது. அண்ணல் யானையின்மீது குடைநிழலிலிருந்து

பவனிசெல்லுமரசர், அஃதிழந்து தமியராய்த் தளர்ந்து நடந்து செல்லும் நிலையை எய்தினும் எய்துவரென்று பிற்காலத் தமிழ் மன்னர் ஒருவர் எடுத்தியம்பியது ஈண்டுக் கருதற்பாலது.

“குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடை மெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்”

கொண்டுசெல்லும் ஊர்தியும், நிழல்தருங் குடையுமின்றி, வருந்தி நடந்து ஊர்போகுமோர் எளிய மகன்போல் தமிழன்னை நிலையுமுளது. ஆய்ந்து பார்மின்! அவளுக்கு நிழல் தந்து காமின்! பெருமூதாட்டியைப் பேணுமின்! அறம் வளர்த்த அன்னையை உயிர் கொடுத்துப் போற்றுமின்!

வெம்மை என்பது கொடுமை. இதற்கெதிர்மொழி தண்மை. வெம்மை என்ற சொல் ‘வே’ என்னும் முதனிலையிலிருந்து தோன்றுவது. வே=சுடு. வேவித்தல்=சுடுதல், அடுதல். அடுதலென்பதுஞ் சுடுதற் பொருளதே. வெம்மை தவிர்த்தல் செம்மையாம். செம்மை வளர்த்தல் செங்கோல் முறை. இது குடையாற் குறிக்கப்படுகிறது. ஏனெனின், வெம்மையை அது தடுக்கின்றது, நிழலைத் தருகின்றது. கொடுமை என்பதெல்லாம் வெம்மை தருவனவே. இதுபற்றியே தமிழில் நல்லனவும், அல்லனவும் முறையே தண்மை, வெம்மை என்ற கருத்துக்களால் வெளியிடப்படுகின்றன.

ஒருவன் மற்றொருவனுக்கு இன்னாத ஒன்றைச் செய்வானாயின், ‘என்வயிறு எரிகிறது’ என்று மற்றவன் பேசுவதைக் கேட்கின்றோம். எரிதல், கொதித்தல், பொங்குதல், வேதல், புழுங்குதல் என்ற சொற்கள் இன்னாமையைக் காட்ட வழங்கப்படுகின்றன. ‘உளங் கொதிக்கிறது,’ ‘பொங்கினவர் காடாள்வார்,’ என்ற வழக்குகள் இதை விளக்கும். வெங்கானம், வெப்புலி, வெங்களிறு, வெம்மொழி, என்பனவெல்லாம் இவ்வழக்கையொட்டி எழுந்தவையே. “நாவினாற் சுட்டவடு” என்று வள்ளுவர் கூறுவது இதை வலியுறுத்தும். வேறோரிடத்தில்,

“தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப்படும்”

என்று பொய்யாமொழி கூறுவதிலிருந்து நெருப்பிற்குங் கொடுமைக்குமுள்ள தொடர்பு வெளியாகின்றது. தீயவை என்பன தீயின் தன்மையன. என்னை? தீமை உளத்தைப் புண்படுத்துவது. தீ உடலைப் புண்படுத்துவது. சுடுவதே இரண்டுக்குமியற்கை. (தொடரும்)

“செல்லும் வான வில்லும்”

திரு. M. A. தேவராஜன்,
திருவத்திபுரம்.

(1) ஆற்றில் தோணிகள் அழகுறச் செல்வதும்
சேற்றில் நீர்க்கடல் திரையிணைக் கையினால்
போற்றித் தைவரக் கப்பல்கள் போவதும்
காற்றில் புள்ளினம் கடிதிற் பறப்பதும்,

(2) வண்ண மாமவை கண்டுமகிழ்வே!
எண்ண அலையென எங்கும் விரிந்தெழில்
விண்ணில் பரந்து பறக்கும் விண்மழை
மண்ணில் யாவினும் எண்ணில் வனப்பவே!

(3) ஞாலந் தன்னில்நீ நயக்கும் அழகினும்
மேல தாங்கவின் மிகுந்த பாலங்கள்
ஏல நதியின்மேல் இருக்கும் ஆயினும்
கோலம் அன்றது கூறின் இவற்றினும்,

(4) அந்தரத்தொரு பாலம் அழகிதாய்ச்
சந்த மாச்செய்து சாரும் மரங்களை
முந்தப் பல்திறம் உந்தக் கார்முகப்
பந்தர் வளைவெனப் பாரில் இணைக்குமே!

(5) காலை மேற்கினும், மாலை கிழக்கினும்,
ஏல விளங்கியிப் பூமி இருந்தொரு
சாலை யும்பர்க்குத் தாண்டக் கட்டிடும்
நீல வானவில் மிக்க நேர்த்தியே!

குறிப்பு:— இது அங்கிலத்தில் புலவர்பெருமாட்டி *Christina Rossetti* எழுதிய “*Boats Sail on the Rivers*” எனும் பாட்டின் மொழிபெயர்ப்பெனக. இக்கவி கலிவிருத்தத்திற்கும், அகவற்பாவிற்கும் ஒத்திருத்தல் காண்க.

ஒட்டக்கூத்தர்.

திருவத்தியூர் வித்வான் T. S. தேவசேனாபதி தேசிகர்
தமிழாசிரியர்
ஸ்ரீ மகந்த உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

பல்வளம் பழுநிய பரதநாடு தோற்றம் மிக்க எற்றம் அடைய வேண்டின் நாட்டுமொழியைப் போற்றல் வேண்டும். செந்தமிழ் மொழியைப் போற்றுங்கால் நந்தமிழ்ப் புலவரை மறத்தலாகாது. புலவர் தம் புனித வாழ்க்கையினைப் பயிலுந்தொறும், பயிலுந்தொறும் இனிமையினும் இனிமை விளையும். தண்டமிழ் நாட்டு வண்டமிழ்ப் புலவர் பல்லோருள்ளும் சில்லோரே புகழெய்தினர். அன்னார் தூய்மைச் சரிதமும், வாய்மைப் பெயரும், ஊரும், பிறவும் உள்ளது உள்ளவாறே காண்டல் அருமையினும் அருமையாக இராநின்றது. காணும் கருவியோ அருகி நின்றது. கிடைத்த சில நூற் கருவிகளைக்கொண்டு பலர் பலரது வாழ்க்கை நிலையினை ஆய்ந்தனர். ஆயுங்கால் எழுந்த குறைக்கோர் அளவில்லை. முன்னுக்குப்பின் முரணுதலில் சற்றும் பின்வாங்கவில்லை. இந்நிலையில் எனக்குக் கிடைத்த சில உண்மைகளைக்கொண்டு சிலர் வாழ்க்கையினை ஆய்வான் புகுந்தேன்.

இனி இனிமைபயக்கும் தனித்தமிழ் மொழியில் புலமை மிகுந்து நன்நிலைமை புகுந்து புவியரசு போற்றும் கவியரசு எனப் புகழ் எய்தினர் இருவர். அவர் தாம் கூத்தரும், கம்பரும் ஆவர். எவ்வாற்றானும் முதன்மையுற்ற கௌடப் புலவன் கவிராக்ஷதன் கவி ஒட்டக்கூத்தன் சரிதத்தை முதற்கண் ஆராய்வான் புகுந்தேன். இவர் வாழ்க்கையைப் பலர் பலவிதமாக எழுதினர். வேண்டிய குறைகள் ஆண்டும் உள்ளன. ஆதலின் குற்றம் நீக்கி நற்ற நவில இப்பெற்றிய கட்டுரை இன்றியமையாதது ஆகும். முதற்கண் கூத்தரது பெயரையும், ஊரையும்பற்றி ஆராய்வோம்.

பேர்:—

செந்தமிழ் நாட்டுப் பைந்தமிழ்ப் புலவோர் இயற்பெயர் உள்ளவாறே வழங்கல் அரிது. மிகுதியும் திட்டமான ஒட்டுப் பெயராகவும், வாழும் ஊரின் வழிவரும் பெயராகவும் வழங்கப்பெறுகின்றது. எனினும் இப்புலவரின் நீடிய பெற்றோர் சூடிய பெயர் கூத்தர் என்றும், இவரது முந்தை நற்றவத்தந்தை சிவசங்கரர் என்றும், தண்டார் சூடும் வண்டார் குழலி தாய் எனவும், எங்குந் தப்புகழ் பெருகும் செங்குந்தர் பிரபந்தம் கூறுநின்றது. அன்றியும் சட்டதிட்டமாக ஒட்டக்கூத்தன் என இட்டப்படி வழங்கும் காரணங்கள் பல உள.

அவை தாம், பாத்திறம் பழுநிய கூத்தர் பெருமான் முத்தொள்ளாயிரம் என்னும் நூலைப் பாடி விஜயாபிஷேகம் செய்து வீர சிம்மாதனத்துவீற்றிருந்தருளிய விக்ரமசோழன் அவைக்களத்து அரங்கேற்றுங் காலை, பரசும்புகழ்சால் அரசன் மகிழ்ந்து அச்செய்யுளில் ஒன்றைத் தனக்கு ஒட்டிப்பாடென, வேண்டிக்கொள்ள

> நடித்தது நச்சர வுச்சிபி னுச்சி மதில்இலங்கை
> பிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
> முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டால்
> அடித்தது பொற்கிரி விக்ரமசோழ அகளங்கனே!

எனப் பாடியதும், பிறிதோர் அமயம்குலாவும் புகழ் விக்ரமன் உலாப் பாடுங்கால், அவ்வுலாவில் இரு கண்ணிகளை ஒரு வெண்பாவாக ஒட்டிப் பாடச்சொல்ல,

> கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்
> செய்ய கரிய திருமாலே—வைய
> மளந்தா யகளங்கா ஆலிலைமேற் பள்ளி
> வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

எனப் பாடியதும், பொங்கும் புகழ் செங்குந்தர் தலைப்பிள்ளைகள் ஆயிரவர் அற்ற தலையால்உற்ற அரியாதனத்து அமர்ந்து நாட்டிய புகழ் ஈட்டி எழுபது பாடிப் பின்னர், பட்ட தலைகள் உடலில் ஒட்டப் பாடினர் என்பது.

> நிலைதந்தார் புவியினுக்கு; யாவருக்கும்
> மானமதை நிலைக்கத் தந்தார்;
> கலைதந்தார் வணிகருக்குச் சிவனஞ்செய்
> திடவென்றே கையில் யாண்டும்
> விலை தந்தார் தமிழினுக்குச் செங்குந்தர்
> என் கவிக்கு விலையாகத்தான்
> தலைதந்தார் எனக் கொட்டக்கூத்தன் எனும்
> பெயரினையும் தாந் தந்தாரே
>
> —எழுப்பெழுபது.

> வெட்டத்தா மிருகூ றுகி விழுந்தவர் தம்மை யெல்லாம்
> கிட்டப்பார்த்திருந்தோர் மெச்சக்கிளர்ந்த வேலவனைப் போற்றி
> மிட்டத்தாற் பழைய வண்ண மிலங்கிடப் பொருத்திவிட்டான்
> ஒட்டக்கூத் தனெ னும் நாம முலகமுற் றரைத்ததன்றே
>
> —புலவர்புராணம்.

எனவரும் சான்றால் தோன்றுவதும், ஒட்டம் என்பது பந்தயப் பொருளாதலின் நாத்திறம்மிக்க கூத்தப்பெருமான் பந்தயம்வைத்து எனைப் புலவர்களை மோனை முத்தமிழ் முற்மதமும் பொழியானை என வென்று விருதுகொள்வர் என்பதும் ஆம். இனி, இச்சீரிய அறிவால் கூறிப கூற்றை நேரிய முறையில் ஆய்வது நமது கடன்.

இங்கரன் பெயராம் சிவசங்கரன் என்பது தந்தை பெயராகவும், வண்டார்குழலி என்பது தாய் பெயராகவும், காணப்படுதலின் இவர்கள் சிவம் பெருகும் சைவசமயிகள் ஆதல் பெறப்படும். ஆதலின் தில்லை தன்னுள் நட்டம்பயிலும் பொது நடத்தெம்மான் பெயராம் கூத்தர் என்பதைச் செந்தமிழ் மணங்கமழ் சீரிய மகனுக்கு அமைத்தனர்போலும். தவம் பெருகும் சிவத்திற்கு அப்பெயர் உண்மை.

"சேணிற்பொலிசெம் பொன்மாளிகைத் தில்லைச்சிற்றம்பலத்து
மாணிக்கக்கூத்தன் வடவான் கயிலைமயிலை"

எனவரும் திருக்கோவையாலும்

"படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என் பாவிநெஞ்சில்
குடிகொண்டவா தில்லையம்பலக்கூத்தன் குரைகழலே"

எனவரும் திருநாவரசர் தேவாரத்தாலும்

"அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சல்என்பார் ஆர்இங்குப்
பொருளாய் எனையும் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்
பலக்கூத்தா" எனவரும்

மணிவாசகத்தாலும் அறியலாகும். ஒட்ட என்ற சிறப்புப் பெயரை ஆயுங்கால் மேற்கூறிய பாவகை பயின்றோர் மூவகைக் கூற்றும் சாலச்சிறந்தனவே. ஆயினும் திட்டமாக அறுதியிட்டு உறுதிகூற இயலவில்லை. ஒப்பற்ற தகுதிபெற்ற மிகுதிநோக்கி ஒட்டக்கூத்தர் என்ற சிறப்புப் பெயரொடு வழங்கப்பெற்றார் என்பது பெறப்படும். அன்றியும் கவிச்சக்ரவர்த்தி, கௌடப்புலவன், கவிராக்ஷதன் என வரும் பெயர்களும் இப்புலவருக்கு வழங்கப்பெற்றதாகத் தெரிய வருகிறது. இவ்வாற்றான் நாம் அறியக்கிடப்பன பல உள. அவை தாம் இச்செந்தமிழ்ப் புலவர் நாவரசே அன்றி பூவரசும் போற்ற வாழ்ந்தார் என்பதும், புலவர் திலகம் என இலகினர் என்பதும், இந்நாவாணர் பெயரைக்கேட்டபாவாணர் அனைவரும்இடியேறுண்ட நாகம்போல் நடுங்குவர் என்பதும், அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையர் என்பதும், வீரம்மிக்க வேந்தரும் போற்ற வீறுடன் வாழ்ந்த மேன்மையர் என்பதும் ஆகும்.

பிறந்த ஊரும் சிறந்த நாடும்:—

இம்மாவளம் பயிலும் பாவலர்பிரானின் பிறந்த ஊரும் சிறந்த நாடும் இதுகாறும் எழுந்த திறலாறுமிக்க வரலாறுகள், யாதும் நேரிய முறையில் கூறுதொழிந்தன. பலர் பலவிதமாகப் பகர்கின்றனர்.

"குன்றக்கூறல் முதலாம் குறைகளைய எண்ணியொரு
வென்றிக்கே தனிநிறுவி வீண்கவிக டலையறுப்பல்
என்றுத்தாங் கவியரசிவ் விகமெல்லாம் கொண்டதிளங்
கன்றுக்கே உருகாவின் கருமணவூர் அரசே"

"தேனுந்துமலர்ச்சோலைத் திருமணவூர்ச் சிவசங்கக்
கோனந்தச் சிற்சபை எங்கூத்தனருட் கூத்தன்"
"சேலேய்விழி மடவார்செங்கா லன்னம் சேர்பழனப்
பாலேய்மணவயிற் கூத்தன்".

எனவரும் பாக்களால் கூத்தரது பிறப்பகம் மணவை என்று தெரிகின்றது என்றும், அம்மணவை ஊழிமிக்க சோழநாட்டில் உள்ளது என்றும், இன்னும் அவ்வூரில் கூத்தரால் சமைக்கப்பெற்ற கூளிப்படை சூழ்காளி கோயிலும் மெய்யுலாம் வைவேல் ஐயனர் கோயிலும் உள்ளன என்றும், இப்பெருமான் வாழ்ந்து பிறங்கிய வீடு இன்றும் உள்ளது என்றும், அவ்வில்லத்தில் கூத்தர் வழிவந்தவர் இன்றும் வதிந்து வருகின்றனர் என்றும் கூறுவர் ஒருசாரார்.

"சென்று செவியளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—வொன்று
மலரிவரும் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவரும் கூத்தன்றன் வாக்கு."

எனவரும் நலங்கிளர்தண்டி அலங்காரத்தில் கூத்தர் பிறப்பகம் மலரி என்று காணப்படுவதால், தூய்மைமிக்க இவ்வாய்மை ஊரே கூத்தர் பிறப்பகம் என்றும், அம்மலரி சேதுநாட்டில் உளது என்றும் கூறுவர் ஒரு சாரார்.

"கம்பனென்றும் கும்பனென்றும் காழிஒட்டக்
கூத்தனென்றும்
கும்பமுனி என்றும்பேர் கொள்வரோ"

எனவரும் பாவால் கூத்தர் பிறப்பகம் பூழியர்கோன் வெப்பொழித்த காழியர்கோன் தோன்றிய சீர்காழியே என்பாரும் உளர்.

சோழநாட்டில் கூத்தனூர் என்ற ஓர் ஊர் உண்டு. அதுவே கூத்தர் பிறந்த ஊர் என்றும் அவரால் இயற்றப்பெற்ற, நலந்தரு கலைவாணி கோயிலும் அங்குளது என்றும் ஒரு சாரார் கூறுவர்.

மேற்கூறியவற்றை முற்றுந் துறந்த முனிவர்தம் முதுமொழியென உச்சிமேற்கொண்டு நச்சுதல் செய்வாரும் உளர். எனினும் எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்பது பொய்யா மொழியின் புனிதவாக்கன்றோ? ஆதலின் இந் நால்வகைமிக்கோர் நால்வகைக் கூற்றையும் ஆய்தல் செய்வாம்.

(தொடரும்)

மின்சார வேளாண்மை.

ஓர் அங்கிலக் கட்டுரையைத் தழுவிய மொழிபெயர்ப்பு.

திரு. N. B. இராமலிங்கம் B. A;

Clerk Post Master General Office, Madras.

107-ம் பக்கத் தொடர்ச்சி.

B. மின்சார காந்தத்தைப் பெறும் வேறு வழி.

வெங்காயத்தைப்போன்ற சில தாவர வர்க்கங்களில் இச்சக்தி அதிகமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சக்தி அத்தாவரங்களையும் அதனருகிலுள்ள செடிகளையும் வேகமாக வளரச்செய்கிறது. ஆதலால் தாமதமான வளர்ச்சியுள்ள செடிகளுடன் வெங்காயத்தைப் பயிரிட்டால் நல்ல பயனைத் தரும். வளரும் செடியைச் சுற்றிலும் 6 லிருந்து 12 அங்குலம் தூரத்தில் வெங்காய முளைகளை 5 லிருந்து 10 வரையில் நடவேண்டும். மந்தமான ஒட்டு மாஞ்செடிகளில் இம்முறை நல்ல பலனை அளிக்கும்.

C. செயற்கை மின்சாரத்தைச் செலுத்தும் விதம்.

இதைச் சாதாரணமாக மோட்டார் கார்களிலுள்ள பேட்டரியிலிருந்து பெறலாம். இரண்டு முனைகளிலிருந்து உண்டாகும் $\frac{1}{4}$ அங்குல நீளமுள்ள தீப்பொறியை A பகுதியில் கூறியுள்ள சல்லடையின் வழியாகச் செலுத்து. எப்படி எனில் பேட்டரியின் ஒரு முனையைச் சல்லடையுடன் இணைத்துவிடு. மற்றொரு முனையைச் சல்லடைக்கு நெருக்கமாக $\frac{1}{4}$ அங்குலத்தில் 8ல் ஒரு பங்கு தூரத்தில் பிடித்தால் தீப்பொறி கிளம்பிச் சல்லடையில் செல்லும். அந்தமாதிரி 1லிருந்து 2நிமிஷம் தீப்பொறியைச் செலுத்தல்வேண்டும். மேற்கூறியவாறு செய்ய முடியாவிட்டால் சாதாரண பாட்டரியின் மின்சாரத்தைச் சல்லடைக்குச் செலுத்தலாம்.

பூச்சிகளைக் கொல்ல இது சிறந்த முறையாகும். சாகாத பூச்சிகள் ஓடிப்போய்விடும். மறுபடியும் அந்தச் செடிக்கு வாரா. கரும்பைப்பற்றும் ஒருவகைப் பூச்சியைக் கொல்ல இதே முறையைக் கையாளுகிறார்கள். சல்லடையில்லாமலும் தீப்பொறியைச் செலுத்தலாம். மாமரம், மிளகாய், கூஸ்பெரி, ஆரஞ்சு, கரும்பு, மூங்கில் முதலியவற்றிற்கு இவ்வாறு செய்யப்பெறுகிறது.

வித்துக்களுக்குத் தீப்பொறி செலுத்துதல்.

பூமியின் சம்பந்தம் இல்லாமல் இருக்கப் பரப்பின உடைந்து போன கண்ணாடி, பீங்கான் துண்டுகளின்மீது ஒரு உலோகத்தாலான தட்டைவை. அதில் விதைகளைப் பரப்பு. விதைகள் குவியலாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு வித்தும் தட்டோடு சம்பந்தப்பட்டிருத்தல் வேண்டும். அதன் காரணம் பின்னால் நன்கு விளங்கும். பேட்டரியின் ஒரு முனையைத் தட்டோடு இணைத்துவிடு. மற்றொரு முனையை $\frac{1}{4}$ அங்குலத்தில் 8ல் ஒரு பங்கு தூரத்தில் பிடித்தால், மின்சாரத் தீப்பொறி பறக்கும். அதேமாதிரி 1 அல்லது 2 நிமிஷம் பாயட்டும். அவ்வாறு செய்தபிறகு அந்த வித்துக்களைக் கைதொடாமல் நடவும். அது மண்ணோடு கலக்கும் வரையில் அது எதனுடனும் சம்பந்தம் செய்யக்கூடாது இதை எப்படிச் செய்வதெனில் பிரயோஜனமில்லாத சைகில் அல்லது மோட்டார் ரப்பர் குழாய் (டியூப்)களை எடுத்துக்கொண்டு கைகளுக்கு உறை செய்துகொள். ரப்பர் உறையணிந்த ஒரு கையைக்கொண்டு அந்த உலோகத் தட்டைப் பிடித்துக் கொள். கையுறை யணிந்த மற்றொரு கையால் விதையை நடவும். மின்சாரத் தீப்பொறி செலுத்திய விதைகள் நல்ல பலனை அளித்துள்ளன. உதாரணம், வெங்காயம், பருத்தி, பார்லி, பட்டாணி, கடுகு, கோஸ், கீரை முதலியன.

ஒரு நற்செய்தி.

அம்பூர் முஸ்லீம் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திருவாளர் A. சையத் யாகூப் ஸாஹிப் பஹதூர் B. A; L. T; நம் தமிழணங்கின் சிறந்த நேயர்களில் ஒருவராவார். பிறர்நலம்பேணல், நண்பர்பால் நிறைந்த அன்புடைமை, உற்றுழியுதவல் முதலிய உயர்குணங்கட் குறையுளாகிய இவரால் ஷை ஹைஸ்கூல் பல துறைகளில் நலனெய்தியது. இன்னார் தற்போது சிதம்பரம் தாலூக்காவைச் சார்ந்த காட்டுமன்னார்கோயில் என்னும் நகரின் ஸ்பெஷல்ஆபீசர் பதவியேற்றமை அனைவர்க்கும் மகிழ்ச்சியளிப்பதாகும். நம்மருமைத் தோழர் யாகூப் அவர்கள் தமது பதவியில் படிப்படியாக உயர்ந்து பொதுநல பாதுகாப்பாளராக நெடிது வாழுமாறு இறைவன் திருவருள் நிலவுக.

147

தமிழ்த்திருமணம்.

விக்ரம ஆண்டு ஆவணித் திங்கள் 31-ம் நாள் காலை 10-மணி முதல் 11-மணிக்குள் திருப்பத்தூர் முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. பண்டித லா. சி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் மகன் திரு. லா. சி. சாமிநாதன் என்ற மணமகனுக்கும், பெரிய குனிசி திரு. M. A. நட்சத்திர அய்ய செட்டியார் அவர்கள் மகள் திரு. சரஸ்வதி அம்மை என்ற மணமகளுக்கும், ஷை பண்டித லா. சி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் மகள் திரு. சூடநாயகி அம்மை என்னும் மணமகளுக்கும் ஆம்பூர் பெரியான்குப்பம் திரு. கு. சுந்தர செட்டியார் மகன் திரு. மாணிக்கம் என்ற மணமகனுக்கும் திருப்பத்தூரில் ஷை பண்டிதர் அவர்கள் இல்லத்தில் திருமண விழாக்கள் நிகழ்ந்தன. அவ்விழாக்களில் திருப்பத்தூர் அரசாங்க வழக்கறிஞர் திரு. P. பெரியசாமிப் பிள்ளை அவர்கள் B. A; B. L; அவைத்தலைமைதாங்க வித்வான் திரு. கவிநயம் கந்தசாமி அவர்களும், வித்வான் திரு M. வேங்கடாசலம் அவர்களும் திருமணச் சடங்குகளை இனிது நிறைவேற்றினர்.

வழக்கறிஞர் திரு. ஜி. சாமி நாயுடு அவர்கள் B. A; B. L; அவைத்தலைமையின்கீழ் ஷை கவிநயம் அவர்களும் ஷை P. பெரிய சாமிப் பிள்ளை அவர்களும் ஷை பண்டிதர் அவர்களும் தமிழ்த் திருமணத்தைப்பற்றி அரும்பெரும் சொற்பொழிவாற்ற, திருமணங் கள் சிறப்புற நிறைவேறின. இத்திருமணங்களை முன்னிட்டு ஷை ஜி. சாமிநாயுடு அவர்களால் தமிழ் வெளியீடுகட்கு நன்கொடைகள் வழங்கப்பெற்றன.

திரு. பண்டித லா. சி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களின் செல்வத் திருவளர் மக்கள் இளமையிலேயே சிறந்த தமிழ்ப்பற்றும் சீரிய அறிவும், நேரிய நெறியும் உடன்வளர வளர்ந்துவரும் வண்மையர். நம் பண்டிதர் அவர்களின் அருந்தவப்புதல்வி திரு. சூடநாயகி என்னும் ஷை மணமகள் தமிழ்க்கல்வி, கேள்விகளில் ஆர்வம்நிறைந்து அருங்கலை பயிலும் ஓர் ஆரணங்காம். இவ்வம்மை திங்களன்ன கலைவளர் திறத்தின் தன் இன்னுயிர்க் கொழுநனுடன் நந்தமிழன்னையின் தனி மாண்பினை இனிது விளக்குந் திறத்தினில் இல்லறம் மேற்கொள்ளுதல் யாவர்க்கும் பெருமகிழ்வினை விளைவிப்பதாம்.

இம்மணமக்கள் அனைவரும் அறிவிற்சிறந்த மக்கட் செல்வம் பொருள்நலம் முதலிய பல்வளனும் நிறைந்து நெடிது வாழுமாறு திருவருள் துணை புரிவதாகுக.

148

சிவ அம்புஜம் அம்மையார்.

ஆர்க்காடு திரு. அ. வாசுதேவ முதலியார், திரு. இரத்தினம் அம்மையுடன் செய்த தவப்பயனாகிய சிவ. அம்புஜம் அம்மை அவர்கள் நம் தமிழணங்காசிரியர் அவர்களின் அருமருந்தன்ன அன்னையராவார். அவ்வம்மை ஷெ ஆசிரியர் அவர்களின் அருந்தவத் தந்தையும், தம்மருமைக் கொழுநருமாகிய தமிழ்ப்புலவர் சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின் மனங்கோணாது அன்னார் உளக்குறிப்பறிந்து கற்புக்கடன் பூண்டு இல்லற நெறியை இனிது நடாத்தினாராவார். இவ்வணங்கனார் தம் கணவர்பால் மலரும், மணமும்போல் மனமும், குணமுமொருமித்து நலமுற வாழ்ந்தமை யாவரும் நன்கறிந்ததே. சென்ற மூன்று மாதங்களுக்கு முன் நிறைநாள் எய்திய தம் போற்றருங் கொழுநரைப் பிரிந்த பெருந் துயர் ஆற்றாது நிகழ் விக்ரம ஆண்டு புரட்டாசிமீ 18௳ (3-10-40) வியாழக்கிழமை காலை 10-30 மணிக்குமேல், முன்னர் துறக்கம் புகுந்த தங்கேள்வர் உறவுநாடி இம்மண்ணுலக வாழ்வைத் துறந்தனர். அன்றே மாலை எரியூட்டும் ஐந்தாநாள் (7—10—40) திங்கள் காலை பால் மஞ்சனமும் அடுத்த 15-ம்நாள் விக்ரம ஆண்டு ஐப்பசிமீ 1௳ (17—10—40) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குமேல் சோளூர்ப் பாலாற்றங்கரையில் இறுதிக்கடன் சடங்குகளும் இனிது நிறைவேறின.

அன்று மாலை விஜயம்செய்தவர்களில் உபதேசியார் திரு. D. பெஞ்சமன் அவர்களும், ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. P. M. வேணுகேபால் நாயுடு அவர்களும் நிறைநாள் எய்திய ஷெ அம்மையாரவர்களின் குடும்பத்தினர்க்குமட்டும் ஒரு சிறு தேற்றரவுக்கூட்டம் நிகழ்த்தி, தாய் தந்தையரை ஒருமிக்க இழந்து ஆருத்துயருழலும் நம் தமிழணங்காசிரியரவர்கட்கும், ஏனையோர்க்கும் சிறந்த ஆறுதல் விளையுமாறு அரிய சொற்பொழிவு நிகழ்த்தித் தேறுதல் வழங்கினர்.

அனுதாபக் கடிதங்களும் இரங்கற்பாக்களும் அனுப்புவித்தோர் விஜயம்செய்தோர் முதலிய அனைவர்க்கும் நன்றிபாராட்டுதல் வழங்கப்பெற்றது.

V. சந்திரநாத நைனார்

ஆசிரியர்.